## ஆறாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 4

**1] மழையே மழையே வா வா – நல்ல; வானப் புனலே வா வா – இவ்; வையத் தமுதே வா வா - இந்தப் பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] பாரதியார், பாப்பா பாட்டு

2] வாணிதாசன், குழந்தை இலக்கியம்

**3] பாரதிதாசன், இசையமுது**

4] நாமக்கல் கவிஞர், சங்கொலி

**2] தகரப் பந்தல் தணதண வென்ன; தாழும் கூரை சளசள வென்ன; நகரப் பெண்கள் செப்புக் குடங்கள்; நன்றெங் கும்கண கணகண வென்ன (மழையே மழையே...) - இந்தப் பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] பாரதியார், பாப்பா பாட்டு

2] வாணிதாசன், குழந்தை இலக்கியம்

**3] பாரதிதாசன், இசையமுது**

4] நாமக்கல் கவிஞர், சங்கொலி

**3] ஏரிகுளங்கள் வழியும்படி, நாடு; எங்கும் இன்பம் பொழியும்படி, பொடி; வாரித்தூவும் பூவும் காயும்; மரமும் தழையும் நனைந்திடும்படி (மழையே மழையே...) - இந்தப் பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] பாரதியார், பாப்பா பாட்டு

2] வாணிதாசன், குழந்தை இலக்கியம்

**3] பாரதிதாசன், இசையமுது**

4] நாமக்கல் கவிஞர், சங்கொலி

**4] தழையா வெப்பம் தழைக்கவும் மெய்; தாங்கா வெப்பம் நீங்கவும்; உழுவார் எல்லாம் மலைபோல் எருதை; ஒட்டிப் பொன்னேர் பூட்டவும் (மழையே மழையே...) - இந்தப் பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] பாரதியார், பாப்பா பாட்டு

2] வாணிதாசன், குழந்தை இலக்கியம்

**3] பாரதிதாசன், இசையமுது**

4] நாமக்கல் கவிஞர், சங்கொலி

**5] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] வானப்புனல் – மழைநீர்

2] வையத்து அமுது – உலகின் அமுதம்

**3] வையம் – உறவு**

4] தகரப்பந்தல் – தகரத்தால் அமைக்கப்பட்ட பந்தல்

**குறிப்பு :- வையம் – உலகம்**

**6] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] பொடி – மகரந்தப் பொடி

**2] தழை – காற்று**

3] தழையா வெப்பம் – பெருகும் வெப்பம்

4] தழைக்கவும் – குறையவும்

**குறிப்பு :- தழை – செடி**

**7] 'புரட்சிக் கவிஞர்' எனவும் 'பாவேந்தர்' எனவும் புகழப்படுபவர்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**8] 'சுப்புரத்தினம்' - என்ற இயற்பெயர் உடைய கவிஞர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**9] பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு - ஆகிய நூல்களின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**10] பாரதிதாசன் அவர்களின் காலம்?**

1] 29.04.1861 முதல் 21.04.1944 வரை

**2] 29.04.1891 முதல் 21.04.1964 வரை**

3] 29.04.1881 முதல் 21.04.1954 வரை

4] 29.04.1891 முதல் 21.04.1974 வரை

**11] ஆற்றவும் கற்றார் அறிவுடையார்; அஃதுடையார் நாற்றிசையும் செல்லாத நாடில்லை; - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார்

2] புறநானூறு, கண்ணகானர்

3] திரிகடுகம், நல்லாதனார்

**4] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்**

**குறிப்பு :- இந்நூலின் ஆசிரியர் முன்றுறை அரையனார். முன்றுறை என்பது ஊர்ப்பெயர். அரையன் என்னும் சொல், அரசனைக் குறிக்கும். இவர் முன்றுறை என்ற ஊரை ஆண்ட அரசராக இருக்கலாம். அல்லது, அரையன் என்பது புலவரின் குடிப்பெயராகவும் இருக்கலாம். இப்பாடலில் வரும் பழமொழி, "ஆற்றுணா**

**வேண்டுவது இல்" என்பது. இதற்குக் "கற்றவனுக்கு கட்டுச்சோறு வேண்டா" என்பது பொருள்.**

**12] அந்நாடு வேற்றுநாடு ஆகா, தமவேயாம்; ஆயினால் ஆற்றுணா வேண்டுவது இல் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார்

2] புறநானூறு, கண்ணகானர்

3] திரிகடுகம், நல்லாதனார்

**4] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்**

**குறிப்பு :- இந்நூலின் ஆசிரியர் முன்றுறை அரையனார். முன்றுறை என்பது ஊர்ப்பெயர். அரையன் என்னும் சொல், அரசனைக் குறிக்கும். இவர் முன்றுறை என்ற ஊரை ஆண்ட அரசராக இருக்கலாம். அல்லது, அரையன் என்பது புலவரின் குடிப்பெயராகவும் இருக்கலாம். இப்பாடலில் வரும் பழமொழி, "ஆற்றுணா வேண்டுவது இல்" என்பது. இதற்குக் "கற்றவனுக்கு கட்டுச்சோறு வேண்டா" என்பது பொருள்.**

**13] பழமொழி நானூறு ----------------- நூல்களுள் ஒன்று.**

1] ஐம்பெரும் காப்பியங்கள்

2] ஐஞ்சிறும் காப்பியங்கள்

**3] பதினெண் கீழ்க்கணக்கு**

4] பதினெண் மேல்கணக்கு

**14] பழமொழி நானூறு நூலில் எத்தனை பாடல்கள் உள்ளன?**

1] 120

2] 96

3] 386

**4] 400**

**15] ஜவகர்லால் நேரு அவர்கள் ---------------- ஆண்டு முதல் -------------- ஆண்டுகள் வரை தம் மகளுக்குக் (இந்திரா காந்தி) கடிதங்கள் எழுதிக்கொண்டே இருந்தார்.**

1] 1892 முதல் 1934

2] 1902 முதல் 1944

3] 1912 முதல் 1954

**4] 1922 முதல் 1964**

**16] ஜவகர்லால் நேரு அவர்கள் எத்தனை ஆண்டுகள் தம் மகளுக்குக் (இந்திரா காந்தி) கடிதங்கள் எழுதிக்கொண்டே இருந்தார்.**

1] 36

2] 38

3] 40

**4] 42**

**17] இந்திரா காந்தி அவர்கள் ---------------- கல்லூரியில் பயின்றார்.**

**1] தாகூரின் விசுவபாரதி கல்லூரி**

2] பனராசு இந்து பல்கலைக்கழகம்

3] மாநிலக் கல்லூரி

4] இவற்றில் ஏதுமில்லை

**18] விசுவபாரதி கல்லூரி எந்த மாநிலத்தல் உள்ளது?**

1] ராஜஸ்தான்

**2] மேற்கு வங்கம்**

3] ஒடிசா

4] கருநாடகா

**குறிப்பு :- மேற்கு வங்கம் - சாந்திநிகேதன் என்னும் இடத்தில் உள்ளது.**

**19] ஜவகர்லால் நேரு அவர்கள் தம் மகளுக்கு (இந்திரா காந்தி) எந்த சிறையில் இருந்து கடிதங்கள் எழுதினார்?**

1] டெல்லி சிறை

2] மேற்கு வங்கம் சிறை

**3] அல்மோரா சிறை**

4] இவற்றில் ஏதுமில்லை

**20] இந்திரா காந்தி அவர்கள் --------------- என்பவரின் உதவியுடன் படிக்க வேண்டிய பாடங்களை முடிவு செய்தார்.**

1] வினோபா பாவே

**2] கிருபாளினி**

3] சத்ய பாமா

4] இவர்களில் யாருமில்லை

**21] ஜவகர்லால் நேரு அவர்கள் படித்த பல்கலைக்கழகம்?**

1] ஆக்ஸ்போர்டு

**2] கேம்ப்ரிட்ஜ்**

3] கிங்ஸ்டன்

4] இவற்றில் ஏதுமில்லை

**22] புத்தகம் வாசிப்பதனைக் கடமையாக ஆக்குதல் கூடாது. கட்டாயப்படுத்தவும் கூடாது. அப்படிச் செய்தால், புத்தக வாசிப்பு மகிழ்ச்சியைத் தராது. வெறுப்பே உண்டாகும். - இந்த கூற்று யாருடையது?**

1] காந்தியடிகள்

**2] நேரு**

3] அண்ணா

4] பெரியார்

**23] "போரும் அமைதியும்" என்ற நூலின் ஆசிரியர் யார்?**

**1] டால்ஸ்டாய்**

2] சேக்சுபியர்

3] பிளேட்டோ

4] காளிதாசர்

**குறிப்பு :- உலகின் மிகச் சிறந்த நாவல்களில் ஒன்று, என இந்த நாவலை நேரு குறிப்பிட்டுள்ளார். ( "போரும் அமைதியும்" - டால்ஸ்டாய் )**

**24] கேம்ப்ரிட்ஜ் - எந்த நாட்டிலுள்ள பல்கலைக்கழகம்?**

1] ஜப்பான்

2] பிரான்சு

**3] இங்கிலாந்து**

4] அமெரிக்கா

**25] பிளேட்டோ ------------- மொழியின் சிந்தனையாளர்.**

1] எகிப்து

2] ஆங்கிலம்

3] இந்தி

**4] கிரேக்கம்**

**26] சாகுந்தலம் - என்ற நாடக நூலின் ஆசிரியர்?**

1] வால்ட் மில்டன்

2] யுவான் சுவாங்

3] போகர்

**4] காளிதாசர்**

**27] அல்மோரா சிறை எந்த மாநிலத்தில் உள்ளது?**

**1] உத்தராஞ்சல்**

2] கேரளா

3] பஞ்சாப்

4] ஒடிசா